**19-04-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தில் உரையாடப்படவேண்டியுள்ள தலைப்புக்களும் உரையாடல் நடத்தப்படவேண்டிய முறையும்.**

சமகாலத்தில் நாம் உரையாடவேண்டியுள்ள விடயங்கள், கற்க வேண்டியுள்ள சமூக அரசியற் பரப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலாக இக்கூட்டம் அமைந்தது.

நாம் ஆழமாகக் கற்றறிந்துகொள்ள வேண்டியிருக்கும் சமூக முக்கியத்துவம் மிக்க விடயங்களைச் சேர்ந்து கலந்துரையாடிக் கற்பதற்கான தளமாகவே சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் உருவாக்கப்பட்டது.

காலப்போக்கில் சமூகவிஞ்ஞானக் கற்கை வட்டக் கூட்டங்களின் ஒரு சிறு பகுதியாக இருந்த "வளவாளர்களின்" வருகை எமது கூட்டங்களின் இன்றியமையாத கூறாக ஆகிப்போனது. இதன்காரணமாகவே அடுத்தடுத்த கூட்டங்களைத் திட்டமிடுவதில் சிக்கல்களை நாம் எதிர்நோக்குகிறோம் என்பதை இனம்காண்கிறோம்.

இத்தேக்க நிலையை உடைத்து மறுபடியும் எமது கூட்டங்கள், கூடிக் கலந்துரையாடிக் கற்பதற்கானவையாக மாற்றப்பட வேண்டும்.

ஒருவர் மட்டுமே ஆயத்தப்படுத்தி வந்து முழு அறிமுக உரையையும் வழங்குவதென்றல்லாது தெரிவு செய்யப்படும் விடயப்பரப்பில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தகவல்களைத் தேடி வந்து கூட்டத்தில் பகிர்வதாக எம் நடைமுறையை மாற்ற வேண்டும்.

எடுத்துக்கொண்ட விடயப்பரப்புத் தொடர்பான கட்டுரைகள் போன்றவற்றை செய்திமடல் வாயிலாகவும் facebook குழுமம் வாயிலாகவும் மின்னஞ்சலூடாகவும் பகிர்ந்து இவ்வாயத்தங்களைச் செய்யலாம்.

பயன்மிக்க நூல்களை அறிமுகப்படுத்திக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான சிறு சிறு கருத்துப்பகிர்வுகளைச் செய்தி மடலில் பிரசுரிக்கவேண்டும் என்ற ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது.

செய்திகள், விடயங்கள் மீதான இச்சிறு சிறு விமர்சனங்கள் சமூக வலைத்தளங்களிலும் சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் இணையக் குழுமத்திலும் பகிரப்படுவதால் அவற்றைக் கூடுமான வரையில் செய்தி மடலில் இணைத்துக்கொள்ள முடியும்.

அடுத்தடுத்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களாகப் பின்வரும் பரப்புக்கள் பரிந்துரைக்கப்பட்டன.

* இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி
* வங்கிகள் பொருண்மியத்தில் வகிக்கும் பாகம்
* மேற்காசிய நாடுகளின் (மத்தியகிழக்கின்) சமகால அரசியல் நிலவரங்கள்
* சிரியா
* ஈரான் மீதான பெற்றோலிய ஏற்றுமதி தடை
* அணுசக்தி
* சூழலியல்
* இயற்கைப் பேரிடர்களும் அவற்றோடிணைந்த அரசியலும்
* NGO
* வணிகமயமாக்கப்பட்ட விளையாட்டு
* நன்னீர் அரசியல்.



சண்முகம் சிவலிங்கம்

**சண்முகம் சிவலிங்கம்** (1937 - ஏப்ரல் 20, 2012, **பாண்டிருப்பு**)

ஈழத்தின் முக்கிய கவிஞர்களில் ஒருவர். 1960 முதல் இலக்கியத்துக்குப் பங்காற்றி வந்த சண்முகம் சிவலிங்கம் ஓர் ஓய்வுபெற்ற விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேரளத்தில் படித்து அறிவியலில் பட்டம் பெற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியராகப் பணி ஆற்றினார். பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றார்.

நீர்வளையங்கள், சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும் என்ற சிறந்த இரண்டு கவிதைநூல்கள் மட்டும் இதுவரை வெளிவந்துள்ளன. மார்க்சிய அழகியல் ரீதியில் அமைந்த விமர்சனக் கட்டுரைகள் பலவற்றை எழுதிஉள்ளார் ; கவிஞர் மஹாகவியின் முக்கியத்தினை நிலைநிறுத்துவதில் இவரது கட்டுரைகள் கவிஞர் நுஹ்மானின் பணிகளுடன் துணைநின்றன.

இவர் விமர்சனக் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதுவதோடு கவிதை மொழிபெயர்ப்பிலும் பங்காற்றியுள்ளார். ஒரு கவிஞராகவே பரவலாக அறியப்பட்டாலும் இவரது சிறுகதைகளும் மிகவும் தரமானவையே.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சண்முகம் சிவலிங்கம் நினைவாக அவரது கவிதைகள் இரண்டு ....

# 71ன் பின்னர்

நம்பிக்கை உள்ளவர்கள் மேலே நடக்கட்டும்
வெற்றுச் சுலோகங்களை வீணே இடுவதேன்?
நம்பிக்கையைத்தான் நாங்களும் தேடுகிறோம்
கொண்டுவந்தது வெறும் பனிக்கட்டி
இடைவழியில் உருகி
விரல் இடுக்கில் ஒடிற்று.

மயிர்க்கொட்டி
இலையை வேகமாக உண்ணும்.
அதனால் கூட்டுப்புழு சோம்பேறியாவதில்லை
மயிலிறகை எடுத்து நீங்கள்யாரும் செருகலாம்
கோஷங்களை எடுத்து யாரும் கொளுவலாம்
நம்பிக்கைத் தாளை பார்சலில் ஒட்டலாம்
ஆனால்
பார்சலுக்குள்ளே என்ன உள்ளது?
ஆமாம்
கூட்டுப்புழுவை'சோம்பேறி' என்றேசாதே!

(1973)

# தேவதைகளும் கடவுளரும்

மறக்காதீர், மறக்காதீர்
தேவதைகளை அழிக்கு முன்
அவர்களைப் பைத்தியம் ஆக்குவர் கடவுளர்
சுறாக்களை இழுக்குமுன்
அவைச் சுதந்திரமாய் ஓடவிடுவர் மனிதர்கள்.

சிறைக் கதவுகள் மூடுவது
திறந்த கதவினுள் சென்ற பின்புதான்
துப்பாக்கிகள் வெடிக்காதிருப்பது
தொடுவில்லை தொடாத வரையில்தான்
ஒரு நிகழ் யுத்தத்தின் நிறுத்தம்
வரும் யுத்தத்தின் தொடக்கம்.
திறந்த வெளிச் சிறைக்கூடம்
சுதந்திரபூமி ஆவதில்லை.

மறக்காதீர், மறக்காதீர்
தேவதைகளை அழிக்கு முன்
அவர்களைப் பைத்தியம் ஆக்குவர் கடவுளர்
சுறாக்களை இழுக்குமுன்
அவைச் சுதந்திரமாய் ஓடவிடுவர் மனிதர்கள்.

(2003)

## அணுக்கழிவுகளின் குறியியல் பற்றி உம்பர்த்தோ ஈக்கோ

அமெரிக்காவில் அணுக்கழிவுகளைப் பல நூறு மீட்டர் ஆழத்தில் புதைப்பதற்கென பல்வேறு பாலைவனப்பகுதிகளைத் தேர்வுசெய்திருந்தது, அமெரிக்க அரசாங்கம். இந்தப்பகுதிகளில் வெளியார் அறியாமல் சட்டென்று நுழைந்துவிடக்கூடிய அபாயம் உண்டு. ஆனால் இன்று நுழையக்கூடியவர்கள் பற்றியதல்ல இந்தக்கவலை! மாறாக, அடுத்த பத்தாயிரம் ஆண்டுகள்வரை இப்படி யாரும் நுழையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பிரச்னை! அதுவரை இந்த அணுக்கழிவுகளின் கதிரியக்கம் நீடிக்கும் என்பதே காரணம்.

பத்தாயிரம் ஆண்டுகளில் பேரரசுகள், ஏன் பெரும் நாகரீகங்கள் கூட அழிந்துபடலாம். எகிப்தின் பாரோ பேரரசர்களின் இறுதி மன்னன் அழிந்த சில ஆண்டுகளிலேயே எகிப்திய சித்திர எழுத்தை எப்படிப்படிப்பது என்ற அறிவும் அழிந்துபட்டது பற்றி வாசித்து அறிகிறோம். அதே கதி இன்னும் பத்தாயிரம் ஆண்டுகளில் நமக்கும் ஏற்பட்டுப்போகலாம் என்று கருத இடமுண்டு. அப்போது நாம் மீண்டும் காட்டுமிராண்டி-யுகத்துக்குத் திரும்பலாம். ஏன், வேற்றுகிரகவாசிகள் யாராவது நம் புவிக்கிரகத்துக்கு விஜயம் செய்யலாம். அப்படி வருவோரிடம், கதிரியக்கம் உள்ள இந்த இடங்களுக்குப் போகாதீர் என எப்படி நாம் எச்சரிக்கை செய்யப்போகிறோம்...

இந்தப்பிரச்னையைக் கையில் எடுத்தவுடன் ஒருமுடிவுக்கு வந்தார் செபோக். இந்தச்செய்தியைத் தொடர்ந்துசொல்ல வாய்மொழி போதாது என்பதே அந்த முடிவு. மின்செய்தியாக வைக்கலாம் என்றால் அதற்குத் தொடர்ந்த மின்சக்தி சாத்தியமாக வேண்டும். செய்தியை நறுமணமாகத் தொடரலாம் என்றால் அதனால் சில மணி நேரத்தைக் கூடத் தாண்ட முடிவதில்லை...

இப்படியான தொடர்ந்த செய்திக்கு மரபான சித்திரமும் சித்திர எழுத்தும் கூடச் சரிவராது என்ற முடிவுசெய்தார் செபோக்.

**[நாகார்ஜூனனால் தமிழ்ப்படுத்தப்பட்ட கட்டுரை ஒன்றிலிருந்து... முழுமையாகப்படிக்க** : valai.thulaa.net/76 ]




**அணு உலைகள் : தேவையா, தீமையா ?**
**இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு**

1. அணு உலைகளின் பாவனையும், தேவைகளும்.
2. அணு உலை காரணமாக ஏற்பட்ட விபத்துக்கள்.
3. அணு உலையிட்கு ஆதரவு தெரிவிப்பவர்களின் வாதங்கள்.
4. அணு உலையை எதிர்ப்பவர்களது வாதங்கள்.
5. உலகம் முழுவதும் அணு உலக்கு எதிராக நடந்த போராட்டங்களும் அவற்றின் விளைவுகளும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA